
2015


2016


2017



## ආයතනයේ නම : දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය ගම්පහ

ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරිම

## நிறுவனத்தின் பெயர்: மாவட்ட செயலகம் கம்பஹா

**பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்**

## Name of Institution: District Secretariat – Gampaha

**Submission of observation of Hon Minister and steps taken with regard to the reports tabled by the committee on Public Account in terms of Standing Order No.119(4)**

**இலங்கை பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட நிலையியற் கட்டளை 119(4) தொடர்பான அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பாராளுமன்றத்திற்கு ஆற்றுபடுத்துதல்**

**பாராளுமன்ற வெளியீட்டுத்தொடர் 183**

**மாவட்டச் செயலகம் : கம்பஹா**

| **அ.க.குழுவின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள்** | **கணக்கீட்டு அலுவலர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்** | **தற்போதைய முன்னேற்றம்** |
|---|---|---|
| **1.** வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களினால் வெளிப்படுத்தப்பட்ட சீர்செய்யப்பட வேண்டியிருந்த நிலுவைகள் தொடர்பாக நி.பி. பிரகாரம் ஒரு மாதகாலத்துக்குள் தீர்க்கப்படாதிருந்தது. | நிதிப் பிரமாணம் 396 (இ) பிரகாரம் தொடர்ந்தும் நடவடிக்கையெடுக்கப்பட்டு வருவதுடன் இது தொடர்பாக மாதாந்திர மற்றும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கணக்காய்வாளருக்கு பிரதிகளுடன் பின்தொடரப்படும். 2020 ஆம் ஆண்டில், கொவிட் 19 தொற்றுநோய் சூழ்நிலையில், காசோலைகளை வங்கியில் சமர்ப்பிப்பதில் தாமதம் மற்றும் காசோலைகள் காணாமல் போனதன் காரணமாக, உரிய ஒழுங்குமுறைகளைப் பின்பற்றி பதிலீட்டுக் காசோலைகள் வெளியிடுவதற்கு வேண்டியேற்பட்டது. சில பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதில் உள்ள தாமதம் காரணமாக, காசோலைகள் வழங்குவதில் தாமதம் கண்டறியப்பட்டதுடன் முடிந்தவரை இந்த நிலைமை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.<br>இந்த காசோலைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டிருப்பதுடன், மஹர பெட்டகத்தில் இருந்த பணம் திருடப்பட்டதால், தீர்க்கப்படாத காசோலைகளுக்கான தீர்க்கப்படாத 24 வைப்புக்களில் ரூ.19,447 பணம் வங்கியில் வைப்பீடு செய்யப்பட முடியவில்லை. | அதற்கமைய, மஹர பண மோசடி காரணமாக தீர்க்கப்படாத 24 வைப்புத் தொகைகளில் ரூ.19,447 பணம் மாத்திரம் மேலும் செலுத்துவதற்கு எஞ்சியிருப்பதுடன், அந்த தொகையை சம்பந்தப்பட்ட பண மோசடி தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்ததன் பின்னர் உரிய சீராக்கங்கள் செய்யப்பட்டு தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| **2.** நி.பி.94(1) பிரகாரம் செலவுத் தலைப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீட்டைப் பயன்படுத்திய பின்னர் ஆண்டின் இறுதியில், எஞ்சியிருந்த ஒதுக்கீட்டு வரம்பை மீறும் வகையில் பொறுப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | வருடத்தில் ஈடு செய்யப்பட வேண்டிய பொறுப்புகளை, முடிந்தவரை அதே வருடத்திற்குள் செலுத்தி முடிப்பதற்கு விசேட வேலைத்திட்டத்தை பயன்படுத்தியிருப்பதுடன் அதனூடாக அடுத்த ஆண்டில் தீர்க்கப்பட வேண்டிய பொறுப்புக்களை முடிந்தவரை குறைத்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்தது. மேலும் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் வெளிப்படுத்தப்பட்ட பொறுப்புகளிலிருந்து 1101 மற்றும் 1402 ரூபாய் முறையே 340,919 ரூபா மற்றும் 24,150 ரூபா ஆன தொகை 2020 ஒதுக்கீட்டிலிருந்து பயன்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், வேறு உரிய ஒதுக்கீட்டு வரம்புக்குள் மாத்திரம் பொறுப்புக்களை மேற்கொள்ளுமாறு மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | 2022 ஆம் ஆண்டின் எஞ்சிய ஒதுக்கீட்டு வரம்பிற்குள் உரிய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| **3.** ஒரு வருடத்திற்கும் மேலாக கடன் நிலுவைகள் இருந்தன | இக்காரணம் வழக்கமாக பின்தொடரப்படுவதுடன் நிலுவைக் கடன் மீதிகள் பெரும்பாலானவை கடந்த சில வருடங்களில் அறவிடப்பட்டிருப்பதுடன் எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஓய்வுபெற்றதன் பின்னர் மேலும் இந்த நிலுவைகளில் ஒரு பகுதியை அறவிடுவதற்கு எதிர்பார்த்துள்ளது. | 2022 ஆம் ஆண்டில், நிலுவையிலுள்ள கடன் மீதிகளை அறிவிடுவதற்கான விசேட வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டதுடன், அதனூடாக 551,294 ரூபா தொகை அறவிடப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டிலும் இதே முறையில , மீதமுள்ள நிலுவைக் கடன் மீதியான ரூபா. 1,759,431.47 ஆன தொகையையும் அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. |
| **4.** பொது வைப்புக் கணக்கில் உள்ள காலாவதியான வைப்புத்தொகை குறித்து, நி.பி. 571 இன் பிரகாரம் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | பொது வைப்புக் கணக்கின் நிலுவையைத் தீர்ப்பதற்காக கடந்த சில ஆண்டுகளில் முறையான நிகழச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு, பெரும்பாலான நிலுவைகள் தீர்ப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டிருப்பதை அறியத்தருகின்றேன். அதேபோன்று, இழப்பீட்டுத் தொகையைத் தீர்ப்பதற்கு ஒரு விசேட வேலைத் திட்டம் பயன்படுத்தப்படடிருப்பதுடன் அதிவேக நெடுஞ்சாலைகளுக்கான கையகப்படுத்துதலின் கீழ் போதுமான இழப்பீடு வழங்கப்படாததால் பெறப்படாத இழப்பீட்டுத் தொகையின் அதிகளவு இந்த தொகையை பிரதிநிதிப்படுத்தப்படுவதுடன் அந்த இணக்கப்பாடுகள் | 2022.12.31 ஆம் திகதியாகும்போது, வைப்பு கணக்கு இலக்கம் 6000-0-0-1-0-61 (பிணை வைப்பு), 6000-0-0-2-79 (கேள்விப்பத்திர வைப்புக்கள்), 6000-0-0-13-49 (மூன்றாம் தரப்பினர்களுக்கான கொடுப்பனவுகள்) மற்றும் 6000-0-0-18-39 (நியதிச்சட்ட கொடுப்பனவுகள்) இன் கீழ் 2 வருடங்களுக்கு மேற்பட்ட எந்தவித வைப்பும் இல்லாதிருப்பதுடன் ஒப்பந்த நிறுத்திவைத்தல்கள் (6000-0-0-16-31) இன் கீழ் 2 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்பு நிலுவையான ரூபா 14,104,972.11 ஆன தொகை தீர்ப்பதற்கு ஒப்பந்ததாரர்கள் விழிப்பூட்டப்பட்டிருப்பதுடன் 2023 ஆம் ஆண்டில் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| | கிடைக்கும் வரை உரிய இழப்பீட்டுத் தொகை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைப்பதற்கு ஏற்படும். மேலும், காணித்தகராறு, இழப்பீடு பெறுபவர்கள் வெளிநாடு செல்லல் போன்ற காரணங்களால் இந்த இழப்பீடுகள் தீர்ப்பதில் தாமதம் ஏற்படுகிறது. இருப்பினும், இந்த வைப்பு நிலுவைகளை 2023 ஆம் ஆண்டில் முடிந்தவரை தீர்ப்பதற்கு நடவடிக்கையெடுப்பேன். | அதேபோன்று காணி வைப்புக்கள் (6000-0-0-17-0-10) இன் கீழ் மேலும் உள்ள 5 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்பு நிலுவையான ரூபா 198,669,879.20 ஆன தொகை காணித்தகராறு காரணமாக தீர்க்கும் பிரச்சனைகள் எழுந்துள்ளன. அக்குறித்த நிலுவைகளும் 2023 ஆம் ஆண்டில் தீர்க்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| **5. வெளிவாரி தரப்பினர்களுக்கு வழங்கப்படடுள்ள சொத்துக்கள்**<br><br>மினுவாங்கொடை பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் உன்னாருவையில் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ இல்லத்தில் 1990 வருடம் முதல் குடியிருக்கும் அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்கள் அகற்றுவதற்கு நடவடிக்கையெடுக்கப்படவில்லை. | இந்த காணி, காணிகள் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணியாகும். 1970-1977 காலத்திற்குள் இந்த கட்டிடம் காணிகள் சீர்திருத்த ஆணைக்குழுவால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பிற்பட்ட காலத்திற்குள் கிராம உத்தியோகத்தர் அலுவலகம் பராமரிக்கப்பட்டு வந்துடன் கட்டிடம் இடிந்து விழுந்த நிலையில் இருந்ததால் கிராம உத்தியோகத்தர் அலுவலகம் அகற்றப்பட்டுள்ளது. பின்னர் அந்த கட்டிடத்தில் அத்துமீறி ஒரு குடும்பம் வசித்திருப்பதால் அக்காரணம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கின்போது அனுபோகித்தமைக்கு மாத்திரம் பொருந்தும் வகையில் வழக்குத் தீர்ப்பு குடியிருப்பாளர்களுக்கு சாதகமாக வழங்கப்பட்டுள்ளது. பின்னர், உடைமையினை மீட்பதற்காக தொடரப்பட்ட வழக்கின்போது, அந்த வழக்கு தொடரும்போது ஏற்பட்ட தவறுகளால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.<br><br>ஆகையால் அந்தக் காணி, காணிகள் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரியதென உறுதி செய்யப்பட்டதால் உடைமையினை மீட்டெடுப்பது குறித்து பிரதேச செயலாளர் பொறுப்புகூற வேண்டியதில்லையென்பதுடன், அவ்விடயம் தொடர்பில் நடவடிக்கையெடுப்பதற்காக காணிகள் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் அது குறித்து இதுவரை எந்த பதிலும் கிடைக்கப்பெறவில்லை. | இது குறித்து 2022.08.26 ஆம் திகதி நடாத்தப்பட்ட மாவட்ட கணக்காய்வு முகாமைத்துவ குழுவின்போது கலந்துரையாடப்பட்டதுடன் அதற்கமைய இந்தக் காணி, காணிகள் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணி என்பதால் அத்துமீறிய குடியிருப்பு தொடர்பாக நடவடிக்கையெடுக்கும் அதிகாரம் காணிகள் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான கடமை என்பதால், எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை சம்பந்தப்பட்ட ஆணைக்குழுவிற்கு கையளிப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. |

| | | |
|---|---|---|
| **6.** 2014 ஆம் ஆண்டில் மஹர பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பண மோசடி | மேல் மாகாண சபைக்கு, மத்திய அரசாங்கத்திற்கு மற்றும் சமுர்த்தி திணைக்களத்திற்கு ஏற்பட்ட இழப்பு முறையே ரூ.915,786, ரூ.126,459.42 மற்றும் ரூபா 40,000 ஆகும். அதற்கமைய, மத்திய அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை சம்பந்தப்பட்ட நபர்களுக்கு 3 மாத காலத்திற்குள் தவணையாகவோ அல்லது ஒரே முறையில் முழுத்தொகையையும் கம்பஹா மாவட்டச் செயலகத்திற்குச் செலுத்துமாறு மாவட்டச் செயலாளரின் இலக்கம். மாசெ/P/1/16 மற்றும் 2021.11.01 திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று 2021.12.14 திகதிய மேல்மாகாண சபைக்கு அறவிடப்பட வேண்டிய நட்டம் குறித்து ரூபா 228,946.50 படி செலுத்துமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | ï இது தொடர்பாக நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வழக்கு விசாரிக்கப்பட்டு வருவதால், அதன்படி நடவடிக்கை எடுப்பதாக இரு முகாமைத்துவ சேவைகள் அலுவலர்களால் கடிதமொன்றின் மூலம் தெரிவித்துள்ளனர். அதற்கமைய, மாவட்டச் செயலாளரின் இலக்கம் மாசெ/P/1/16 மற்றும் 2022.02.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் உரிய தொகையை தாமதமின்றி செலுத்துவதற்கு நடவடிக்கையெடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>ii..அதேபோன்று அப்போதைய மஹர பிரதேச செயலாளர் மற்றும் கணக்காளர் ஆகியோரால் நட்டத்தை செலுத்த முடியாதெனவும் தெரிவிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடிதங்கள் மாவட்டச் செயலாளரின் இலக்கம் மாசெ/P/1/16 மற்றும் 2022.02.11 மற்றும் 2022.02.17 திகதிய செயலாளர் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன.<br><br>iii. ஆயினும், சம்பந்தப்பட்ட அனைத்து பொறுப்புகூறவேண்டிய அலுவலர்களும் நட்டத்தை ஈடு செய்வதற்காக எந்தவித உடன்பாடும் இல்லாததால் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் இலக்கம். F/DA/06/WRI02/003 மற்றும் 2022.02.10 திகதிய கடிதத்துக்கமைய ஒரு புதிய விசாரணைக் குழுவால் மீண்டும் நி.பி. 104(1) ஆ பிரகாரம் விசாரணை நடாத்துவதற்கு சம்பந்தப்பட்ட குழுவை பெயரிடப்பட்டு அங்கீகாரத்துக்காக 2022.03.22 திகதி உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>iv. உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரால் புதிய விசாரணைக் குழுவிற்காக 2022.04.08 திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதுடன் அதற்கமைய மாசெ/P/1/16 மற்றும் 2022.04.21 திகதி புதிய விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | | v. புதிய விசாரணைக் குழு அறிக்கையின் முடிவும், முன்புபோலவே சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து சமனான அளவில் வசூலிக்கப்பட வேண்டுமென்பதாகும்.அதனால் வரிசை அமைச்சின் புலனாய்வுப் பிரிவினால் முறையான விசாரணை மேற்கொள்வதனை பரிந்துரை செய்து, 2022.10.20 ஆம் திகதி புதிய குழு அறிக்கையை அமைச்சிற்கு அனுப்பியுள்ளது. |

சமன் தர்ஷன பாண்டிகோரள

அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்

கம்பஹா நிர்வாக மாவட்டம்

Saman Dharsnana Pandikorala
Government Agent District Secretary
Gampaha Administrative District

வி.டி.எஸ். ரோட்ரிகோ

பிரதான கணக்காளர்

கம்பஹா நிர்வாக மாவட்டம்

V.D.S. Rodrigo
Chief Accountant
District Secretariat
Gampaha.

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

நீல் பண்டார ஹபுஹின்ன
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக் குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளருக்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2023 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவ மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)
பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சர்.